சிறுவர் மலர்

...தும்பாய் அதுசீ சாமாதலே

விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்...

அழகிய ஆரம்பம்...

இன்ஃ இதழ்

4-ம் இதழ்

09.02.2025 - பிப்ரவரி

சிறகுகளை உடைத்து விட்டு
பறக்க நினைக்கிறது
இன்றைய காதல்!

முத்து ஆனந்த்,
வேலூர்

துள்ளி எழுந்த
மாடு முட்டியது
ஜல்லிக்கட்டில்...

பையன் என்ன செய்றான்
கேள்வியே உறுத்தியது...
வேலைக்கு போகாத அப்பா...

நம்.திரு.ர அம்ஏச்

அதிர்ந்தான் தூண்டில்காரன்
குளத்தில் தொப்பெனக் குதித்தது
மீன் கொத்தி!

-சு.மூன்சுதாகரன்,
வானவன்மகாதேவி.



படைப்பாளர்கள்,
படிப்பவர்கள்
அனைவருக்கும் நன்றி...

ர.ஸ்ரீஹரி, ஆசிரியர்

இன்ஃ இதழ்

29 – சக்தி நகர், ஆதம்பாக்கம் சென்னை
செல் 70940 53241 e.mail : indhrumail@gmail.com

முதலில் உழைப்பு
பிறகே கூலி...

அழகிய ஆரம்பம்...
இன்று
இதழ்

குட்டிக் கவிதைகள்



முத்து ஆனந்த் வேலூர்
செல் 7010482479

கண்கள்

துப்பாக்கி
இல்லாத தோட்டாக்கள்
அவள் இரு விழிகள்!

துணை

யாருமற்ற தன்மையிலும்
துணையிருக்கும்
தன்னம்பிக்கை!

விருப்பம்

உன்னைச் சந்தித்த பிறகு
விடுமுறையை விரும்புவதில்லை
என் கா த ல்!

அழகு

அழகேகூட
சொக்கிப் போகும்
அவள் அழகைக் கண்டு!

கா த ல்

நீயும் நானும்
ஒன்று சேர வைத்தது
ஒட்டிக் கொண்ட கா த ல்!

ஹைக்கூ கவிதைகள்

நீ இல்லாத நேரங்களில்
என்னைப் பின்னிப் பெடலெடுக்கிறது
உன் நினைவுகள்!

நீ இல்லாத நேரங்களில்
விடுமுறை விட்டு விடுகிறது
கனவுகளும்கூட!

உன் அன்பிற்குப்
பின் தான் தெரிந்தது
மனதிற்குக்கூட வயது குறையுமென்று!

முத்து ஆனந்த், வேலூர்

உனக்கான அமைதி
உன்னிடமே உள்ளது...

அழகிய ஆரம்பம்...
இன்ஸ
இதழ்

ஹை கூ கவிதைகள்



குடந்தை பரிபூரணன்.

தூக்கமில்லா இரவு
மாடியில் துணையாய் இருக்கிறது
நிலவு!

மின்வெட்டு, இரவில்
குழந்தைகளைத் தேடிப் பறக்கின்றன
மின்மினிகள்!!

கணினி நுட்பம்
பதிவிறக்கம் செய்ய முடியவில்லை
உணவை!!

குஞ்சுகள் மிதித்து
முடமாகிப் போனக் கோழிகள்
காப்பகத்தில்!!

கவிதை:

விவசாயிகளின்
கண்ணீரை துடைக்கவே
தண்ணீராக பொழிகிறது
மழை.!

- சென்னா, அரூர்



தவறான பதிலைவிட
மௌனம் சிறந்தது..

அழகிய ஆரம்பம்...
இன்று
இதழ்

துணுக்குகள்

ஆங்கிலத்தில் மிக நீளமான
வார்த்தை
SMILES. முதல் S. கடைசி S
இரண்டுக்கும். இடையில்
ஒரு மைல் நீளம் உள்ளது



நடேஷ் கன்னா,
கல்லிடைக்குறிச்சி
செல் 9944284135

புது கவிதைகள்

முதியோர் இல்லம்

இது ஒரு மனித காட்சி சாலை
எங்களிடம் பால் குடித்த மிருகங்கள்
அவ்வப்போது இங்கு வந்து போகும்

பணம்

வேலைக்காரனுக்கு கொடுத்தால்
சம்பளம்
கடவுளுக்கு கொடுத்தால்
காணிக்கை
தேவைக்கு கொடுத்தால்
கடன்
கடனுக்காககொடுத்தால்
வட்டி
செயலுக்காக கொடுத்தால்
லஞ்சம்
சில்லறையாக கொடுத்தால்
பிச்சை
பெரிதாக கொடுத்தால்
தானம்
இவை தான் பணத்தின் தன்மை

மதிப்பு

நாம் தேடும் இடத்தில்
இருப்பதை விட
தேட படும் இடத்தில் இருப்பதே
மதிப்பு

ஏமாற்றம்

எங்கே அதிக நம்பிக்கை
வைக்கிறோமோ. அங்கே தான்
அதிகம் ஏமாற்றம் அடைகிறோம்

நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி
செல். 9944284135

தேவையற்றதை வாங்காதே...
தேவையானதை விற்காதே...

அழகிய ஆரம்பம்...
இன்று
இதழ்

தனி ஆவர்த்தனம்



தண்டனை

மலர்மதி

பூனை தள்ளிவிட்டுப்போன பெயிண்ட் டப்பாவைப் பார்த்து தன் மகன் சங்கர் தான் அதை செய்திருப்பான் என தவறாகப் புரிந்து கொண்டு அவனை பிரம்பால் நாலு சாத்து சாத்தினான் பெயிண்ட்டர் புகழேந்தி.

ஆத்திரத்துடன் வீட்டை விட்டு வெளியேறி மெயின் ரோடுக்கு வந்த புகழேந்தியை மடக்கிய போலீஸ், "இன்னைக்கு ஊரடங்குன்னு தெரிஞ்சும் எவ்வளவு தைரியமிருந்தால் வெளியே வந்திருப்பே?" என்று கேட்டு லத்தியால் நாலுசாத்து சாத்தி அனுப்பியது.



Vikas Basic Grammar Class



Master your Grammar and write with confidence

COURSE HIGHLIGHTS:
. Understanding Grammar rules
.Perfect your sentence structure
.Preparing for your exam

vikasclasses.2023@outlook.com
Call @9962201523

COURSE SESSION:
- Every Monday, Wednesday and Friday
- Timing:6.30 pm to 7.30 pm

தனக்குத்தானே பேசுவதற்கு சிந்தனை செய்வது...


அழகிய ஆரம்பம்...

இன்று

இதழ்

Su	M	Tu	We	Th	Fr	Sa
February 2025						1
2	3	4	5	6	7	8
9	10	11	12	13	14	15
16	17	18	19	20	21	22
23	24	25	26	27	28	

இணையவழி மோசடிக்கு பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in



நேரம்

- நேரம் ஒரு புதிரானது
- நீங்கள் சிறிது அழித்தால் அதன் பங்குக்கு சேர்த்து அழிக்கும்.
- நீங்கள் சிறிதளவு மதித்தால் அது உங்களை பெருமளவு மதிக்கும்.
- சேமித்தால் இருமடங்காகும். செலவழித்தால் காலாவதியாகும்.

ஆக்கம் : தி.ரேவதி

உலகம் அன்பிலும்
சமரசத்திலும் இருக்கிறது...

அழகிய ஆரம்பம்...

இன்று ஈ இதழ்

கலர் கலர்
மொய் கவர்

20 கலர் கவர்கள் உங்கள் பெயர் ப்ரிண்ட் செய்து தரப்படும். கவர் தானாக ஒட்டிக்கொள்ளும் (Auto Paste) வசதியுடன் உள்ளது. வித்யாசமாக உங்கள் மொய் பணத்தை செலுத்தலாம்.

20 கவர்ஸ்
Rs.150 + Courier Rs.50 = Rs.200
G.Pay ... 7094053241 and
send your address in Whatsapp...



Key Chain Holder

உங்கள் பெயரில்
கீ செயின் ஹோல்டர்
செய்து தரப்படும்

4 x 4 inch Size
Rs. 150
Courier +

- வருடம் முழுவதும் உங்கள் விளம்பரம்
- பயனுள்ள பொருள்...
- அனைவர் கண்களிலும் படும்.
- பார்த்தவுடன் மனதைக் கவரும்.

ஆர்டர் செய்ய
7094053241-க்கு மெசேஜ் அனுப்பவும்.

இன்று உடன் இணைய...

ர.ஸ்ரீஹரி, ஆசிரியர்

இன்று ஈ இதழ்

29 – சக்தி நகர், ஆதம்பாக்கம் சென்னை
செல் 70940 53241 e.mail : indhrumail@gmail.com

மற்றவரிடம் கேள்...
முடிவை நீ எடு...